# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 37 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ரகுராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of November 2025.

**(A4 absent. Petition filed and allowed. Others Present. )**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது திருநெல்வேலிமாவட்டம், கூடங்குளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அச்சன்புதூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில் 12.08.2015 ம் தேதி 23.30 மணிக்கு அச்சன்புதூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் என்பவர் பதிவுசெய்து எனது விசாரணைக்கு வைத்திருந்த அச்சன்புதூர் காவல்நிலைய குற்ற எண். 222/2015,

சட்டப்பிரிவுகள் 147, 323, 365 IPC வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.08.2015 ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், சாமித்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் தெருவிளக்கு மற்றும் டார்ச் லைட், எமர்ஜென்சி லைட் உதவியுடன் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ- 39** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ- 40** ஆகும். பின்னர் சாட்சிகள் லட்சுமி, சதீஷ் பாலகுமார், வீரமணிகண்டன் மற்றும் முதல் தகவல்அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

2) பின்னர் 18.08.2015 ம் தேதி 16.00 மணிக்கு இவ்வழக்கில் ராஜகோபால் (எ) சண்டியர் கொலை செய்யப்பட்ட இடமான மேக்கரையிலிருந்து குரவன் குடை செல்லும் ரோட்டில் பேச்சித்தேவர் என்பவரின் தோப்பின் மேல்புறத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் சாட்சிகள் பேச்சித்தேவர், சுடலைக்கனி, ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ- 41** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ- 42** ஆகும். மேலும் சாட்சிகள் சுடலைக்கனி, பேச்சித்தேவர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். ஆனால் மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ. 41 ல் தேதி தவறுதலாக 18.08.2016 என குறிப்பிட்டுள்ளேன்.

3) பின்னர் 18.08.2015 ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் வடகரை - மேக்கரை செல்லும் ரோட்டில் அன்பு இல்லம் பக்கம் வடக்கிலிருந்து தெற்காக வந்த வெள்ளைநிற TN-03-0002 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா லோகன் காரை நிறுத்தி விசாரித்தபோது, மேற்படி வழக்கின் எதிரிகள் சாமித்துரை, முத்துராஜ் இருவரும் காரில் வந்ததால் மேற்படி எதிரிகளை விசாரித்தபோது அவர்கள் வழக்கின் சம்பவத்தை ஒப்புக்கொண்டதால் இருவரையும் அதே இடத்தில் வைத்து கைது செய்து வழக்கின் எதிரியான சாமித்துரை என்பவரை சாட்சிகள் இசக்கித்துரை, குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய காரையும், ராஜகோபால் என்ற சண்டியரை வெட்டி கொலை செய்ய பயன்படுத்திய அரிவாள் ஒன்றையும் காரிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை காலை 07.30

மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். எதிரி **சாமித்துரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ- 43** ஆகும். அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ- 6 தான். கைப்பற்றப்பட்ட அந்த **அரிவாள் சா.பொ. 13** ஆகும்.

4) எதிரிகள் சம்பவத்திற்கு வருவதற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனங்களை அச்சன்புதூர் - நெடுவயல் மெயின்ரோட்டில் சங்கரவடிவு என்பவரது வீட்டில் மறைத்து வைத்திருப்பதாக ஒப்புதல்வாக்குமூலத்தில் கூறியதை அடுத்து சங்கரவடிவின் வீட்டிற்கு சென்று எதிரி சாமித்துரை அடையாளம் காட்டி எடுத்து அஜர் செய்த பஜாஜ் அவெஞ்சர் TN-79-A-2323 என்ற புளூ கலர் முன்பக்கம் SPM, ராஜ் பாண்டியன் என்று எழுதப்பட்ட இருசக்கர வாகனத்தையும், TN-76-W-2923 என்ற எண் கொண்ட TVS Jive என்ற கருப்பு, மஞ்சள், வெள்ளை கலந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும், TN-76-AA-6885 என்ற கருப்பு கலர் நீலம் கலந்த சாம்பல் கலர் Hero Splender Pro மோட்டார் சைக்கிளையும் அதே சாட்சிகள் முன்னிலையில் 08.00 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ- 5 தான். **TN-79-A-2323 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சா.பொ.14** ஆகும். **TN-76-W-2923 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சா.பொ.15** ஆகும். **TN-76-AA-6885 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சா.பொ.16** ஆகும்.

5) மேலும் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 323, 365 IPC லிருந்து 147, 148, 364, 302, 201 இ.த.ச ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.44** மேலும், அன்றைய தினமே, இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு படிவம் -91 தயாரித்தும் எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அந்த **படிவம் - 91 (2 எண்ணம் ) அ.சா.ஆ- 45 வரிசை** ஆகும்.

6) பின்னர் 24.08.2015 ம் தேதி இவ்வழக்கில் கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட எதிரி ஐயப்பன் என்பவரை 17.30 மணிக்கு காவலுக்கு எடுத்து 19.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, நிலையத்திலிருந்த சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் எதிரி ஐயப்பனை

விசாரித்தபோது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் சக்திவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

7) பின்னர் 27.08.2015 ம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் சாமித்துரை, ஐயப்பன், முத்துராஜ் (எ) ராஜ் ஆகியோர்கள் பாளை மத்திய சிறையில் இருந்து வருபவர்களை கணம் நீதித்துறை நடுவர், தென்காசி அவர்கள் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சாஆ., 46** ஆகும். 31.08.2015 ம் தேதி பாளையங்கோட்டை மத்திய சிறையில் வைத்து மேற்படி எதிரிகளை சாட்சிகள் லட்சுமி, சதீஷ்பாலகுமார், வீரமணிகண்டன் ஆகியோர்கள் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினார்கள். அந்த **அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சாஆ. 47** ஆகும்.

8) பின்னர், 07.09.2015 ம் தேதி இவ்வழக்கின் எதிரி ராமர் என்பவர் செங்கோட்டை கணம் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து அவரை போலீஸ் காவலுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பெற்று அச்சன்புதூர் காவல்நிலையம் கொண்டு வந்து 15.00 மணிக்கு நிலையத்திலிருந்த சாட்சிகள் முருகன் மற்றும் பரமசிவன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். மேலும் சாட்சிகள் முருகன் மற்றும் பரமசிவன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே என்னுடைய விசாரணை முடித்து எதிரி ராமரை செங்கோட்டை கணம் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன்.

9) பின்னர் 08.09.2015 ம் தேதி இவ்வழக்கின் சொத்துக்களுக்கு கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் பி.ஆர் நம்பர் பெற்றேன். மேலும் அன்றைய தினமே எதிரி சாமித்துரையின் முதல் மனைவியான சாட்சி வெள்ளைத்துரைச்சி மற்றும், TN-76-S-0105 என்ற பதிவெண் கொண்ட காரை எடுத்து சென்ற பைனான்ஸ் ஊழியர் சங்கர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் 27.09.2015 ம் தேதி 13.00 மணிக்கு அச்சன்புதூர் - சிவராமபேட்டை ரோட்டில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் வைத்து இவ்வழக்கின் எதிரி சுப்பையாபாண்டியன் (எ) முருகையாபாண்டி என்பவரை அச்சன்புதூர் காவல் நிலைய குற்ற எண். 243/2015 சட்டப்பிரிவுகள் 294(b), 307, 506(2)IPC

வழக்கில் கைது செய்து விசாரித்தபோது சாட்சிகள் மாரியப்பன், வாசுதேவானந்த பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். மேலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அச்சன்புதூர் காவல்நிலைய குற்ற எண். 243/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட அரிவாளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் மாரியப்பன், வாசுதேவானந்த பாண்டியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

10) பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு படிவம் - 91 தயாரித்தும், எதிரியை தக்க வழிக்காவல் மூலம் கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பின்னர் 01.10.2015 ம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் ராமர், சுப்பையா பாண்டியன் (எ) முருகையா பாண்டியன் ஆகியோருக்கு பாளை மத்திய சிறைச்சாலையில் அடையாள அணிவகுப்பு நடத்த கணம் தென்காசி நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.- 48** ஆகும். பின்னர் நான் கொடுத்த வேண்டுகோள்கடிதத்தின் படி தென்காசி நடுவர் அவர்கள் 08.10.2015 ம் தேதி பாளையங்கோட்டை மத்திய சிறையில் வைத்து சாட்சிகள் லட்சுமி, சதீஷ் பாலகுமார் மற்றும் வீரமணிகண்டன் மூலம் எதிரிகளை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தினார்கள். அந்த **அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.ஆ. 49** ஆகும்.

11) பின்னர், 01.03.2016 ம் தேதி இவ்வழக்கில் பாளையங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 608/2015, U/s.302, 201 IPC & பாளையங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 610/2015, U/s. 302 IPC Suspicious Death வழக்கின் கோப்புகள் கிடைக்கப்பெற்று பார்வையிட்டேன். பின்னர் 07.03.2016 ம் தேதி பாளையங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 608/2015 வழக்கின் சாட்சிகள் கீழநத்தம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. பரமேஸ்வரி, கிராம உதவியாளர் திரு.வேம்பன், சாட்சிகள் மணிகண்டன், பண்டாரம், கண்ணன், சிவா, தலைமை காவலர் 1000 திரு. சங்கரபாண்டியன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு.ராமகிருஷ்ணன், திரு. நூருல் ஹக், திரு. தர்மலிங்கம் ஆகியோர்களை விசாரித்தபோது அவர்கள் ஏற்கெனவே பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

12) பின்னர் 08.03.2016 ம் தேதி பாளைங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 610/2015 U/s. 302 IPC Suspicious Death வழக்கில் கீழநத்தம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. பரமேஸ்வரி, கிராம உதவியாளர் திரு.வேம்பன், சாட்சிகள் சத்தியகனி, விஸ்வநாதன், மாரியப்பன், முத்துசாமி, தலைமை காவலர் திரு.சங்கரபாண்டியன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு.ராமகிருஷ்ணன், திரு. நூருல் ஹக், திரு. தர்மலிங்கம் ஆகியோர்களை விசாரித்தபோது அவர்கள் ஏற்கெனவே பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

13) பின்னர் 10.03.2016 ம் தேதி இவ்வழக்கில் பாளைங்கோட்டை காவல் நிலைய குற்ற எண்கள் 608/2015 வழக்கின் சாட்சிகள் துப்பறியும் நாய் பிரிவை சேர்ந்த முதல்நிலை காவலர் திரு. டேனியல் ராஜா, நடமாடும் தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குனர் திரு.டொனால்டு ரவிச்சந்திரன், பாளையங்கோட்டை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சொர்ணம், திரு.ஆறுமுகம் ஆகியோரை விசாரித்தபோது அவர்கள் ஏற்கெனவே பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

14) பின்னர் 18.03.2016 ம் தேதி பாளையங்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 610/2015 வழக்கின் சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சொர்ணம், திரு. ஆறுமுகம், மேலும் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி பேராசிரியர் டாக்டர் திரு.செல்வமுருகன் ஆகியோர்களை விசாரித்தபோது அவர்கள் ஏற்கெனவே பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. பின்னர், 06.04.2016 ம் தேதி வட்டார தடய அறிவியல் அலுவலர் திருமதி. கலாலட்சுமி என்பவர் கொடுத்த சான்றிதழை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த **விசாரா அறிக்கை அ.சா.ஆ. 50** ஆகும்.

15) 24.06.2016 ம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து FTA card கிடைக்கப்பெற்று இவ்வழக்கில் இறந்துபோன ராஜகோபால் (எ) சண்டியரின் ரத்த வழி

சம்பந்தப்பட்ட நபர்களான அவரது தாயார் திருமதி. தங்கம்மாள் மற்றும் மகன் வெளியப்பன் ஆகியோருக்கு மரபணு பரிசோதனைக்காக ரத்த மாதிரி எடுக்க கணம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 51** ஆகும்.

16) பின்னர் 03.07.2016 ம் தேதி இவ்வழக்கின் திருமதி. தங்கம்மாள் மற்றும் ராஜகோபாலின் மகன் வெளியப்பன் ஆகியோருக்கு தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் நீதிமன்ற உத்தரவுப்படி ரத்த மாதிரி எடுக்கப்பட்டு டி.என்.ஏ ஆய்விற்கு சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு முதல் நிலை காவலர் திரு. பாலசுப்பிரமணியன் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் பாளையங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 608/2015 வழக்கில் இறந்துபோன ராஜகோபாலின் உடல் மற்றும் தலையிலிருந்தும் பிரேத பரிசோதனையின் போது இடது தொடையிலிருந்து எடுக்கப்பட்ட தோல்மற்றும் எரிந்த நிலையிலிருந்த துண்டுகள் ஆகியவற்றை ஆய்வுசெய்து சான்றறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் திருமதி. விஜயலட்சுமி அவர்களையும், பாளையங்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 610/2015 வழக்கில் இறந்துபோன ராஜகோபால் என்பவரின் உடைந்த நிலையிலிருந்த மண்டை ஓட்டை பகுப்பாய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய சென்னை தடய அறிவியல் ஆய்வக அறிவியல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த **மரபணு பரிசோதனை அறிக்கை (with DNA typing Unit report )அ.சா-ஆ. 52** ஆகும்.

17) இறந்துபோன நபரின் புகைப்படம் மற்றும் கிடைக்கப்பெற்ற மண்டை ஓட்டு துண்டின் அடிப்படையில் அவற்றை ஒப்பீடு செய்து ஆய்வு செய்கையில் அது குறித்து உறுதியான கருத்துரை வழங்க இயலாது என தெரிவித்து **சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கை அ.சா.ஆ. 53** ஆகும்.

18) பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கில் என்னுடைய விசாரணை முடித்து எதிரிகள் மீது 147, 148, 364, 302, 201 IPC படி இறுதி அறிக்கை தயார் செய்து கணம் செங்கோட்டைநடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்துள்ளேன்

என்றால் சரிதான். இதுபோன்ற வழக்குகளில் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம்தான் சம்பவ இடமாக கருதப்படும் என்றால், கடத்தி செல்லப்பட்ட இடமும் சம்பவ இடமாக கருதப்படும். மற்ற இடங்கள் சம்பவ இடங்களாக கருதப்படாது என்றால் சரிதான். இறந்துபோன சண்டியர் கடத்தப்பட்டதாக சொல்லப்படும் இடம் அச்சன்புதூர் - நெடுவயல் மெயின்ரோட்டில் உள்ள நாகூர் கனி என்பவரின் மளிகை கடை முன்பு என்றால் சரிதான். மேற்படி நாகூர் கனியையோ அல்லது பக்கத்து கடைக்காரர்களையோ சாட்சியாக விசாரித்து சாட்சி பட்டியலில் இணைக்கவில்லை என்றால் அவர்களை விசாரணை செய்தேன், அவர்கள் சாட்சியாக இருக்க விருப்பம் தெரிவிக்காத காரணத்தினால் அவர்களது வாக்குமூலங்களை பதிவுசெய்யவில்லை. சம்பவம் குறித்து தெரிந்தவர்கள் அதை சொல்ல மறுத்தால் அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எதிரிகளை கண்டு பயந்து சாட்சியம் அளிக்க முன்வர மறுத்துவிட்டார்கள். இதுகுறித்து நான் தனியறிக்கை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் நாகூர்கனியின் கடைக்கு முன்னர் கடத்தல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், அதனால்தான் நாகூர்கனியையும், அக்கம் பக்கம் உள்ளவர்களையும் விசாரித்து சாட்சிகளாக முன்னிறுத்தவில்லை என்றால் சரியல்ல.

2) பிணம் கண்டெடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பாளையங்கோட்டை போலீஸ் சரகத்தை சேர்ந்த திம்மராஜபுரம், பைபாஸ் ரோட்டின் கீழ்புறம், கீழநத்தம் ரோட்டின் மேல்பக்கம் முறிக்குளம் என்ற இடத்திற்கும் கடத்தல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாகூர்கனியின் கடைக்கும் இடையே சுமார் 70 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். மேக்கரையிலிருந்து குரவன்குடை செல்லும் ரோட்டில் கொலை நடந்ததாக 1ம் எதிரி சாமித்துரை தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் இவ்வழக்கின் ஒரு சம்பவ இடம் என்றால் சரிதான். அந்த இடத்தின் அருகேயுள்ள நபர்கள் யாரையாவது நான் விசாரணை செய்து சாட்சியாக முன்னிறுத்தியுள்ளேனா என்றால் இல்லை, அந்த பகுதியில் வீடுகள் அதிகமாக காணப்படவில்லை, தோப்பில் வேலை பார்க்கும் ஒரு சிலரை விசாரணை செய்தேன், அவர்களும் இது கொலை வழக்காக இருப்பதால் பயந்துகொண்டு சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அந்த சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேனா என்றால்

இல்லை. நான் தயார் செய்துள்ள வரைபடம் அ.சா.ஆ.42 ல் சம்பவ இடத்தின் அருகே ராசு என்பவரின் வீடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன், மேற்படி ராசு நான் விசாரணை செய்த சமயம் அங்கு இல்லை, அங்கிருந்த வேலையாட்களை விசாரணை செய்தேன், அவர்கள் பெயர்கள் நியாபகமில்லை. நான் 1ம் எதிரி என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், சாட்சிகளின் முன்னிலையில் நான் அதை பதிவுசெய்ததாக சொல்வதும், பொய் என்றால் சரியல்ல. அதனால்தான் கொலை நடந்ததாக சொல்லப்படும் இடத்தின்அருகாமையில் உள்ள நபர்களை விசாரித்து சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

3) மரபணு பரிசோதனை செய்யவேண்டும் என வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சோதனை செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன பிரேதம் சண்டியருடையதுதான் என்பதை உறுதி செய்யத்தான் மேற்படி சோதனை செய்யப்பட்டது என்றால் சரிதான். மரபணு பரிசோதனையின் முடிவிற்கு பின்னர்தான் பிரேதம் சண்டியருடையது என்பது உறுதி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, ஏற்கெனவே இறந்துபோன நபரின் உறவினர்கள் மூலம் உறுதிப்படுத்திவிட்டேன், அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தவேண்டும் என்பதற்காக மரபணு பரிசோதனை செய்யப்பட்டது. மரபணு பரிசோதனைக்கு சண்டியரின் தலையிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டதா, அல்லது உடலிலிருந்து ரத்தம் எடுக்கப்பட்டதா என்பதும் சாட்சிகளின் முன்னிலையில் ரத்தம் எடுக்கப்பட்டதா என்றும் வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் சண்டியரின் தலையிலிருந்து ரத்தம் எடுத்தது பாளையங்கோட்டை காவல் ஆய்வாளரின் விசாரணையின்போது ஆகும், அதுபற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது- இறந்துபோன சண்டியரின் தலையிலிருந்தும், உடலிலிருந்தும் ரத்தம் எடுத்து மரபணு பரிசோதனை செய்யப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றும், அதனால்தான் மேற்படி விவரங்களை என்னால் உறுதியாக கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

4) சண்டியரின் தலை இருந்த இடத்தில் ஒரு பிரேத விசாரணையும், தலையில்லா முண்டம் கிடந்த இடத்தில் ஒரு பிரேத விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். தலையையும், முண்டத்தையும் ஒன்றாக சேர்த்துவைத்து ஒரு பிரேத விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் அந்த விவரம் நேரடியாக எனக்கு தெரியாது. இந்த

வழக்கில் செய்யப்பட்ட பிரேத விசாரணைகள் சட்டப்பிழையானது என்று சொன்னால் சரியல்ல.

5) இவ்வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்த நான்தான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 5 எதிரிகளுக்கும் என்னுடைய வேண்டுகோளின் அடிப்படையில்தான் அணிவகுப்பு நடத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அடையாள அணிவகுப்பு நடத்திய நீதிபதியை விசாரணை செய்து இவ்வழக்கில் ஒரு சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் அந்த அடையாள அணிவகுப்பு அறிக்கையை ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அடையாள அணிவகுப்பு நடத்தப்படும் முன்னரே எதிரிகளை சாட்சிகளுக்கு அடையாளம் காட்டிவிட்டு, அதன் பின்னர் மேற்படி அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது என்றும், அதனால் மேற்படி அடையாள அணிவகுப்பு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) கடத்தப்பட்டதாக சொல்லப்படும் நாகூர்கனியின் கடைக்கும், பிரேதம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கும் இடையே 70 கி.மீ தூரம் உள்ள நிலையில் எந்த இடத்தில் பிரேதத்தில் காணப்பட்ட காயங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் அது பற்றி எதிரி சாமித்துரை என்பவர் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். எதிரி சாமித்துரையால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர இதுகுறித்து வேறு எந்த ஆவணமும் சாட்சியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, மற்ற எதிரிகளும் அவர்களது வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி நபர்களை தவிர்த்து வேறு தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இதுகுறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த நபரின் உடலை எரிக்க கொண்டு செல்லும்போது தனிப்பட்ட சாட்சிகள் பார்த்ததாக துலங்காது என்றால் சரிதான்.

7) இறந்த நபரின் தலை கிடந்த இடத்தில், சண்டியரின் மனைவியான லட்சுமி என்பவர் நேரில் பார்த்து அங்கிருந்த தலை தனது கணவருடையது கிடையாது என்றும், அடையாளம் காட்ட முடியாது என்றும் மறுத்துவிட்டார் என்றால் தலை அடையாளம் காணமுடியாதவாறு சிதைக்கப்பட்டு இருந்ததால் அவர் அவ்வாறு தெரிவித்துவிட்டார். அ.சா.1 லட்சுமி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் என்பவர் அதனை பெற்று வழக்கு பதிவுசெய்தார். புகாரில், தனது கணவரை

கடத்திய நபர்களின் அடையாளம் குறித்து ஏதேனும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் வாகனத்தின் விவரங்களை அடையாளமாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி சாட்சியை கொண்டு நான் அடையாள அணிவகுப்பு நடத்தினேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்னரே அக்கம் பக்கம் உள்ளவர்கள் காவல்நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்துள்ள நிலையில், அதுகுறித்து காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்றால் தகவல் வந்தது உண்மைதான், அது பதிவுசெய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு நினைவில்லை. எனவே, அ.சா.1 புகார் கொடுப்பதற்கு முன்னரே சம்பவம் குறித்து தொலைபேசி வாயிலான கிடைத்த தகவல்தான் முதல் தகவல் என்று சொன்னால் சரியல்ல, அது பொதுவாக அனைத்து காவல்நிலையங்களையும் உஷார் படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட தகவலாகும். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்னரே எங்கள் காவல்நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவல் மறைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும் சமயம் தனது மகனுடன் வந்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 தனது புகாரில் வேனில் 5 பேர் வந்து இறங்கியதாகத்தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, காரிலிருந்து இறங்கியதாகத்தான் குறிப்பிட்டுள்ளார். நாகூர்கனியின் கடையிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டு, எத்தனை மணிக்கு காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தார் என்பதை அ.சா.1 குறிப்பிட்டுள்ளாரா என்றால் கடையிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை.

8) தலையில்லா முண்டத்தில் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தழும்பு மற்றும் கால் பெருவிரல் சிறிது உயரமாக இருக்கும் என்பதை அடையாளமாக குறிப்பிட்டு அதன் அடிப்படையில் சண்டியரின் பிரேதம் என கண்டறியப்பட்டது என்றால் அதுகுறித்து பாளையங்கோட்டை காவல் ஆய்வாளரிடம் கூறியுள்ளார். நாகூர்கனியின் கடைக்கு கீழ்புறம் பல்வேறு கடைகளும், வீடுகளும் உள்ளன என்று சொன்னால் சரிதான். எதிரி சாமித்துரை அயூப் என்பவரின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். எதிரிகளை நீதிபதியின் முன்னர் சாட்சி லட்சுமி அடையாளம் காட்டியதாக போலீஸ் விசாரணையின் போது குறிப்பிடவில்லை

என்று சொன்னால் சரிதான்.

9) சாட்சி வீரமணிகண்டனை நான் என்றைய தினம் விசாரணை செய்தேன் என்றால் 13.08.2015 ம் தேதி விசாரணை செய்தேன், சம்பவத்திற்கு மறுநாள் விசாரணை செய்துவிட்டேன். சாட்சி வீரமணிகண்டன், பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய நபர்கள் சண்டியரை கடத்தியுள்ளார்கள் என்றும், நான் அவர்களது பெயர் விவரங்களை பின்னர் வீரமணிகண்டன் தெரிந்துகொண்டதாக வழக்கிற்காக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10) அ.சா.4 திருமதி. பரமேஸ்வரி எனது விசாரணையில், கக்கன்நகர் மேம்பாலம் அருகே 10 அடி தள்ளி ஒரு தலை கிடந்ததாக குறிப்பிட்டுள்ளார், அது எந்த திசையில் 10 அடி தள்ளி கிடந்தது என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல, கக்கன் நகர் மேம்பாலத்திலிருந்து தெற்காக அதை ஒட்டி மேல்புறம் தென்வடலாக செல்லும் சர்வீஸ் ரோட்டின் மேல்புறம் ரோட்டிலிருந்து 10 அடி தொலைவில் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார்.

11) அ.சா.5 வேம்பன், தலையில்லாத எரிக்கப்பட்ட உடல் குப்புற கிடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும், ஆடுமேய்க்கும் சிறுவன் எரிந்த நிலையில் ஒரு மண்டை ஓடு கிடப்பதாக தகவல் சொன்னதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், அந்த ஆடு மேய்க்கும் சிறுவன் யார் என்பது குறித்து நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது.

12) அ.சா.6 சங்கர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள பைனான்ஸ் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.7 முருகன் தனது சாட்சியத்தில், தண்ணீருக்குள் இருந்து தலையில்லாத முண்டம் எடுக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றும், எனது விசாரணையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளாரா என்றால் முந்தைய ஆய்வாளர்தான் அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார், தலையில்லாத முண்டம் எரிந்த நிலையில் காணப்பட்டதாகத்தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தாடை உடைக்கப்பட்டிருந்ததால் தலையை கொண்டு அடையாளம் காணமுடியவில்லை என அ.சா.9 ஜானகிராமன் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், முந்தைய காவல் ஆய்வாளரின் விசாரணையிலும்

அவ்வாறுதான் குறிப்பிட்டுள்ளார்.

13) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனங்கள் அனைத்தும் திறந்த வெளியில் இருந்துதான் கைப்பற்றப்பட்டதாக துலங்கும் என்றால் சரிதான். மேற்படி வாகனங்களின் ஆர்.சி புக்கை கைப்பற்றி அதன் உரிமையாளர் யார் என்பதை விசாரித்து அவர்களை சாட்சியாக முன்னிறுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொன்னதுபோல் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அதன் அடிப்படையில் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சிகள் பிறப்பித்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் மேற்படி ஆயுதங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து மகேந்திரா லோகன் வாகனம் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும், அதிலிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

14) பாளையங்கோட்டை காவல்நிலைய பொதுநாட்குறிப்பை கைப்பற்றியதாக சாட்சி சொர்ணம், சிறப்பு உதவி ஆய்வாளர் கூறியுள்ள நிலையில், அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி பொதுநாட்குறிப்பு கைப்பற்றப்பட்டதாக வழக்கு ஆவணங்களில் துலங்காது. அ.சா.29 திரு. ஆறுமுகம் ஒப்படைத்த கடவுச்சீட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் விசாரித்து கைப்பற்றிய ஆவணங்களை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அ.சா.26 திரு. டேனியல்ராஜ் மோப்ப நாய் பிரிவின் மூலமாக செய்யப்பட்ட விசாரணை பலனளிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு தடயத்தையும் மோப்ப நாய் கண்டறியவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

15) என்னுடைய புலன்விசாரணை சட்டப்பிழையானது என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக புலன்விசாரணை செய்யாமல் வழக்கிற்கு சம்பந்தமில்லாத நபர்களை எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், நான் சொன்ன நாள், சொன்னநேரத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi